# மலேசியக் கட்டடக் கலைஞர்கள் சங்கம் 2018 கட்டடக் கலைப் புத்தகம் வெளியிடப்பட்டது






மலேசியக் கட்டடக் கலைஞர்கள் சங்கம், சுதந்திர தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, பழம்பெரும் கட்டடக் கலைஞர்களின் பேட்டிகள் உள்ளடக்கிய புத்தகத்தை வெளியீடு செய்தது. 2018 ஆம் ஆண்டு கட்டடக் கலை விழாவை முன்னிட்டு அப்புத்தகம் வெளியிடப்பட்டது.

அந்த விழாவினை சங்கத்தின் புரவலர் துங்கு ஷாத்தாஷா பிந்தி சுல்தான் ஷரிபுடின் இட்ரிஸ் ஷா அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்தார். அவருடன் மாநகர் மேயர் டான்ஸ்ரீ முகமட் அமின், சங்கத்தின் தலைவர் சைருல் அசிடின் பட்ரி உட்பட திரளான பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை கட்டடக் கலை வரலாற்று ஆசிரியர் லாய் சீ கியேன், நாட்டின் முன்னணி கட்டடக் கலைஞர்கள், பொறியியலாளர்களுடன் பல நேர்முகப் பேட்டிகளை நடத்தி உள்ளார். அதன் தொகுப்புகளை புத்தகமாக வெளியிட்டுள்ளார். நாட்டின் தொடக்க கால வடிவமைப்பை உருவாக்கிய 17 பேரின் பேட்டிகள் அடங்கிய புத்தகமாக இது அமைகிறது.

நாட்டின் பழைமையான கட்டடங்களைப் பாதுகாத்து அதனை எதிர்கால சந்ததிக்கும் பொக்கிஷங்களாக வழங்க வேண்டும் என்று சங்கத் தலைவர் எசுமி வலியுறுத்தினார்.